//ஆசிரியர் பொது மாறுதல் – சுற்றறிக்கை – 1//

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை – 6

ந.க.எண். 7479/அ1/இ2/2019 நாள் 24.06.2019

பொருள்: பொது மாறுதல் – 2019 – 2020 ஆம் கல்வி ஆண்டில் அரசு/நகராட்சி உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பொது மாறுதல்– ஆசிரியர்கள் மாறுதலுக்கு விண்ணப்பித்தல் – சார்பு.

பார்வை: அரசாணை (1டி) எண்.218 பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள் 20.06.2019

----

2019–2020ஆம் கல்வி ஆண்டிற்கான ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்வதற்கு 21.06.2019 முதல் 28.06.2019 முடிய மாலை 5.00 மணி வரை தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைப்பில் கண்டுள்ள படிவத்தின் வாயிலாக முதன்மைக் கல்வி அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

2. விண்ணப்பிக்கும் ஒவ்வொரு படிவமும் விடுபடாமல் இதற்கென இணைப்பில் கண்டுள்ள படிவத்தில் வரிசைப்படி பூர்த்தி செய்து பதிவேடாக பராமரிக்க வேண்டும்.

3. தலைமையாசிரியர்கள்/ ஆசிரியர்கள் விண்ணப்பிக்கும் போது முன்னுரிமைக்கான சான்றிதழை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். முதன்மைக் கல்வி அலுவலகத்தில் விண்ணப்பத்தை பெறுவதற்கென முறையான இரண்டு அலுவலக பணியாளர்கள் நியமிக்கப்பட்டு விண்ணப்பத்தினை பெறுதல் வேண்டும். அவ்வாறு பெறும்பொழுது முன்னுரிமைக்கான சான்றிதழ்களை சரிபார்த்து சரியானதுதானா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும், சம்பந்தப்பட்ட ஆசிரியர் தற்போது பணிபுரியும் பள்ளியில் பணியில் சேர்ந்த நாள் சரியானதுதானா என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4. பொது மாறுதல் கோரும் ஆசிரியர் தற்போது பணிபுரியும் பள்ளிக்குப் பெற்ற மாறுதல் வகையை (நேரடி பதவி உயர்வு/பொது மாறுதல்/நிர்வாக மாறுதல்/மனமொத்த மாறுதல்/அலகு மாறுதல்/துறை மாறுதல்/பணிநிரவல்) கூர்ந்தாய்வு செய்து பதிவு செய்ய வேண்டும். தற்போது பணிபுரியும் பள்ளிக்கான மாறுதல் ஆணையை சரிபார்த்து பார்வையில் கண்ட அரசாணையில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி தகுதியிருப்பின் மாறுதல் விண்ணப்பத்தை இணையதளத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

5. தலைமையாசிரியர்கள்/ஆசிரியர்கள் மாவட்டத்திற்குள்/மாவட்டம் விட்டு மாவட்டம் என ஒரே விண்ணப்பத்தில் தேவையான மாறுதல் இனங்களில் ( ✓ ) செய்து விண்ணப்பிக்கலாம். ஆனால் ஒரு மாறுதல் ஆணை பெற்ற பின் இதர கலந்தாய்வுகளில் கலந்து கொள்ள இயலாது என தெரிவிக்கப்படுகிறது.

6. பெறப்படும் விண்ணப்பங்களை முறையாக தொகுத்து கூர்ந்தாய்வு செய்து 24.06.2019 முதல் EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும். இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட தகவல்கள் அடங்கிய மாறுதல் கோரும் விண்ணப்பத்தினை இரண்டு அச்சு பிரதி எடுத்து சார்ந்த ஆசிரியரிடம் வழங்கி பதிவு செய்யப்பட்ட தகவல்களில்

ஏதேனும் திருத்தம் செய்ய வேண்டியுள்ளதா என்பதை உறுதி செய்து பின்னர் கையொப்பம் பெற்றுஅலுவலகத்தில் வைத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட ஆசிரியர் பதிவு செய்யப்பட்ட தகவல்களில் ஏதேனும் திருத்தம் கோரினால் விவரங்களை சரிபார்த்து உறுதி செய்து கொண்டு பதிவு செய்யப்பட்ட தகவல்களில் திருத்தம் செய்யப்பட வேண்டும். இப்பணிகள் யாவும் 02.07.2019 மாலை 5.00 மணிக்குள் முதன்மைக் கல்வி அலுவலகப் பணியாளர்களால் முடித்திடல் வேண்டும்.

7. ஆசிரியர் மாறுதலுக்கான கலந்தாய்வு மிக முக்கியமான நிகழ்வாக உள்ளதால் முதன்மைக் கல்வி அலுவலர் தனிக்கவனம் செலுத்தி செயல்பட வேணடும். அலுவலகப் பணியாளர்களுக்கும் கவனத்துடன் செயல்படுவது தொடர்பாக தகுந்த அறிவுரைகள் வழங்கிடுதல் வேண்டும்.

இணைப்பு:

1.பொதுமாறுதல் அரசாணை

2.ஆசிரியர்கள் பொது மாறுதல் கோரும் விண்ணப்பம்

24.6.19

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக

24/6/19

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

நகல்

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)
இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி)
இணை இயக்குநர் (தொழிற் கல்வி)
அனைத்து மாவட்ட கலந்தாய்வு கணினி இயக்குபவர்கள்
சம்மந்தப்பட்ட பிரிவுகள்

பள்ளிக் கல்வித் துறை

மாறுதல் விண்ணப்பப் படிவம்

அரசு/நகராட்சி உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் தலைமை ஆசிரியர்கள் / ஆசிரியர்கள்

பொது மாறுதல் கோரும் விண்ணப்பம்

(பொருத்தமானதற்கு குறியிட்டுக் காட்டுக)

| | | | |
|---|---|---|---|
| மாறுதல் கோரும் வகை | | | ☐ மாவட்டத்திற்குள்<br>☐ மாவட்டம் விட்டு மாவட்டம்<br>(பொருத்தமானவற்றை ( ) குறியிட்டு காட்டுக) |
| 1 | ஆசிரியர் பெயர், பாலினம், கைபேசி எண் | : | |
| 2 | பதவியின் பெயர் மற்றும் பாடம் | : | |
| 3 | கல்வி மாவட்டம் | : | |
| 4 | வருவாய் மாவட்டம் | : | |
| 5 | பிறந்த நாள் மற்றும் ஓய்வு பெறும் நாள் | : | |
| 6 | தற்போதைய பதவியில் முதன் முதலில் நியமனம் செய்யப்பட்ட நாள் | : | |
| 7 | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் | : | |
| 8 | தற்போது பணிபுரியும் பள்ளியில் பணியேற்ற நாள் | : | |
| 9 | இப்பள்ளிக்கு மாறுதல் பெற்ற வகை (ஏற்கனவே பெற்ற மாறுதல் ஆணை இணைக்கப்படவேண்டும்) | : | பொது மாறுதல் /<br>விருப்ப மாறுதல்/<br>மனமொத்த மாறுதல்/<br>நேரடி நியமனம்/<br>பதவி உயர்வு/<br>நிர்வாக மாறுதல்/<br>அலகு மாறுதல்/<br>பணி நிரவல்/ |
| 10 | தற்போது பணிபுரியும் பள்ளியின் பெயர் (முழு விலாசம், மாவட்டம், பின்கோடுடன்) மற்றும் பள்ளி நிர்வாகம் (Management) | : | |
| 11 | மாறுதல் கோருவதற்கான காரணம் | : | |

| | | | |
|---|---|---|---|
| 12 | சிறப்பு முன்னுரிமையின் அடிப்படையில் மாறுதல் கோரினால் அதன் விவரம். (உரிய சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும். சான்றிதழ் இருந்தால் மட்டுமே சிறப்பு முன்னுரிமைக்குப் பரிசீலிக்கப்படும்) | : | 1. 01.06.2018க்குப் பின் கணவன்/மனைவி விபத்திலோ (அ) நோய்வாய்பட்டோ இறப்பு (இறப்பு நாள் ) இராணுவத்தில் வீரமரணம் அடைந்தவரின் மனைவி<br>2. முற்றிலும் கண்பார்வையற்றவர்<br>3. 50 விழுக்காட்டிற்கு மேல் ஊனம் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ் பெற்றவர்கள்<br>4. 40 விழுக்காட்டு மற்றும் அதற்கு மேல் ஊனம் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ் பெற்றவர்கள்<br>5. மனவளர்ச்சி குன்றிய மற்றும் மாற்றுத்திறனாளி குழந்தைகள் உள்ள பெற்றோர் மற்றும் பெற்றோரை இழந்த மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி குழந்தைகளின் சட்ட ரீதியான பாதுகாவலர் ஆசிரியர்களாக இருப்பவர்கள்.<br>6. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்தவர்கள் மற்றும் டையாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்பவர்கள். (சிகிச்சை பெற்ற நாள் )<br>7.இருதய அறுவை சிகிச்சை மற்றும் மூளைக்கட்டி (Brain Tumor) அறுவை சிகிச்சை செய்தவர்கள்<br>8.கடுமையாக பாதிக்கப்பட்ட புற்று நோயாளிகள்<br>9. 01.06.2019 அன்றைய நிலவரப்படி 5 ஆண்டுகளுக்கு மேல் ஆசிரியர்களாக பணிபுரியும் இராணுவ வீரர்களின் மனைவி<br>10. விதவைகள் மற்றும் 40வயதைக் கடந்த திருமணம் செய்துகொள்ளாத முதிர் கன்னியர்<br>11.1.6.2019 அன்றைய நிலவரப்படி 5 ஆண்டுகளுக்கு கீழ் ஆசிரியர்களாக பணிபுரியும் இராணுவ வீரர்களின் மனைவி<br>12. கணவன்/மனைவி பணிபுரிபவர்கள் (Spouse Employed)<br>13. ஒரே இடத்தில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேலும் பணியாற்றிய ஆசிரியர்கள். |

| | | | |
|---|---|---|---|
| 13 | மாறுதல் கோரும் பள்ளி மற்றும் மாவட்டம் | : | |
| 14 | விண்ணப்பதாரர் பணிபுரியும் இடத்திலிருந்து கணவன்/ மனைவி பணிபுரியும் இடத்தின் தூரம் (கி.மீ) | : | |

**ஆசிரியரின் உறுதிமொழி**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையென உறுதி கூறுகிறேன். நான் கோரும் இடத்திற்கு மாறுதல் அளிக்கும்பட்சத்தில் எவ்வித மாறுதல் பயணப்படி கோரமாட்டேன் என உறுதி அளிக்கிறேன்.

இடம் :

நாள் :

ஆசிரியர் கையொப்பம்

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும், சார்ந்த ஆசிரியர் முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள், தற்போது பணிபுரியும் பள்ளியில் பணியில் சேர்ந்த நாள், மற்றும் மனமொத்த மாறுதல் / விருப்ப மாறுதல் / பதவி உயர்வின் மூலம் மாறுதல் / நிர்வாக மாறுதல் ஆகியவை பணிப்பதிவேடு மற்றும் இதர ஆவணங்களை ஒப்பிட்டுச் சரியாக உள்ளது எனவும், அன்னார் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 17(a) மற்றும் 17(b)ன்படி எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை எனச் சான்றளிக்கப்படுகிறது.

நாள்:

தலைமையாசிரியரின் கையொப்பம்

பள்ளி முத்திரை

(தலைமையாசிரியர் மாறுதல் விண்ணப்பம் எனில் மாவட்டக் கல்வி அலுவலர் சான்று மற்றும் ஒப்பம்)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும், உரிய பதிவேடுகளை வைத்து சரிபார்க்கப்பட்டது எனச் சான்றளிக்கப்படுகிறது.

நாள்:

முதன்மைக் கல்வி அலுவலர்

அலுவலக முத்திரையுடன்